**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

O.S. NO. 345/2022

**வா.சா.1**

**திருமதி. சுப்பாத்தாள்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்)**

வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்தில் பங்கு கேட்டு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து எந்த வகையில் எனக்கு பாத்தியம் என்று கூறுகிறேன் என்றால் என் அப்பாவுக்கு பாத்தியப்பட்டது என்பதால் கேட்கிறேன். தாவா சொத்து என் தகப்பனார் தனித்து கிரையம் பெற்ற சொத்து என்று சொல்கிறேனா என்றால் என் அப்பாவும், அவரது சகோதரர்களும் கூட்டாக கிரையம் பெற்ற சொத்து. மொத்த விஸ்தீரணம் 10 ஏக்கர். சொத்தின் சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியாது. என் அப்பாவும், அவரது சகோதரர்களும் பாகம் பிரித்துக்கொண்டார்களா என்றால் ஆமாம். எப்போது பாகம் பிரித்துக்கொண்டதாக சொல்கிறேன் என்றால் 50 ஆண்டுகளுக்கு முன்பாக பிரித்துக்கொண்டார்கள். என் அப்பாவும், அவரது சகோதரர்களும் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தையும், அவர்கள் பாகம் பிரித்துக்கொண்டதாக கூறும் பாகப்பிரிவினை ஆவணத்தையும்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை எதனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் கிரைய ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பாகப்பிரிவினையில் என் தகப்பனாருக்கு எந்த சர்வே எண்ணில், எவ்வளவு விஸ்தீரணம் கொண்ட பூமி ஒதுக்கினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சர்வே எண் தெரியாது ஆனால் தலா 3 ஏக்கர் ஒவ்வொருவரும் பிரித்துக்கொண்டார்கள். என் அப்பாவுக்கு ஒதுக்கிய சொத்தின் செக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது. என் அப்பாவுக்கு ஒதுக்கிய சொத்தில் கிணறு , வீடுகள் உள்ளதா என்றால் ஆமாம். கிணறு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண் தெரியாது. கிணற்றிற்கு மின் வசதி செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம் மின்சார இணைப்பு எண் தெரியுமா என்றால் தெரியாது. வீடு எந்த சர்வே எண் கொண்ட சொத்தில் உள்ளது என்றும், அதன் கதவு எண், மற்றும் மின் இணைப்பு எண் தெரியுமா என்றால் தெரியாது. என் அப்பாவும், அவரது சகோதரர்களும் பெற்ற கிரைய ஆவணத்தையும், பாகப்பிரிவினை ஆவணத்தையும் நான் இதுநாள்வரை படித்துப் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு எப்போது திருமணமானது என்றால் 40 ஆண்டுகளானது. 40 ஆண்டு காலமாக என் கணவர் வீட்டில் தான் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். என் அப்பா உயிருடன் இருக்கும் வரை அவரும், அவரது இறப்புக்கு பின்னிட்டு பிரதிவாதி மட்டும் தான் பூமியில் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல நாங்கள் அனைவரும் ஒன்றாகத்தான் விவசாயம் செய்து வருகிறோம். நான் தாக்கல் செய்துள்ள முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் நான் பூமியை ஓட்டிவரவில்லை என்று சொல்லிவிட்டு தற்போது இந்த வழக்கிற்காக அனைவரும் ஒன்றாக விவசாயம்

செய்து வருவதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த ஆண்டு மேற்படி பூமியில் என்ன விவசாயம் செய்யப்பட்டு வருகிறது என்றால் 7 ஆண்டுகளாக விவசாயம் செய்து வரவில்லை. பிரதிவாதி தான் விவசாயம் செய்து வருகிறார். நான் விவசாயம் செய்வதற்கு பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததற்கோ, பிரதிவாதியிடமிருந்து மகசூல் தொகை பெற்றது குறித்தோ ஆதாரம் எதுவுமில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் பிரதிவாதிக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், மகசூல் தொகை எதுவும் நான் பெற்றுக்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. என் தகப்பனார் எப்போது காலமானார் என்றால் சுமார் 30 ஆண்டுகள் இருக்கும். என் தகப்பனார் இறந்த பின்னிட்டும், நானும், என் சகோதரியும் பிரதிவாதிக்கு விடுதலை பத்திரம் எழுதி கைரேகை செய்துகொடுத்தோம் என்றால் சரியல்ல. மேற்படி விடுதலை பத்திரம் கள்ளத்தனமாக உருவாக்கப்பட்டது என்று எதன் அடிப்படையில் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளோம் என்றால் படித்து காண்பித்தார்கள் அதன் அடிப்படையில் தான் சொல்கிறேன் நாங்கள் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. யார் அவ்வாறு பத்திரத்தை படித்து காண்பித்தார்கள் என்றால் பத்திர அலுவலகத்தில் படித்து காண்பித்தார்கள். எப்போது அவ்வாறு படித்து காண்பித்ததாக சொல்கிறேன் என்றால் சுமார் 10 அல்லது 15 ஆண்டுகள் இருக்கும். அந்த பத்திரத்தின் அடிப்படையில் தான் பிரதிவாதி பட்டா மாறுதல் செய்துகொண்டாரா என்றால் ஆமாம். அதன் அடிப்படையில் தான் சொசைட்டியில் பயிர் கடன் பெற்றுக்கொண்டார் என்றால் அது எனக்கு தெரியாது. பிரமாண வாக்குமூலத்தை யார் சொல்லி தயாரிக்கப்பட்டது என்றால் நான்தான் சொன்னேன். சத்தியமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பிரதிவாதியும், அவரது ஒன்றுவிட்ட சகோதர,

சகோதரிகள் வழக்கு தாக்கல் செய்த விபரம் எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு தான் தெரியவந்தது. மேற்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் பெற்ற தீர்ப்புகளை எதிர்த்து நான் ஏதாவது வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. மேற்படி தீர்ப்புகள் அனைத்தும் பாகப்பாத்திய விடுதலை பத்திரத்தின் அடிப்படையில் தான் பெறப்பட்டது என்பதால் பாகப்பாத்திய விடுதலை பத்திரத்திற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை பிரதிவாதி 40 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தனித்து அனுபவித்து வருகிறார் என்றும், இந்த வழக்கிற்காக நாங்களும் அவருடன் கூட்டாக அனுபவித்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும், என் சகோதரிக்கும் எங்களது திருமண சமயத்தில் நகையாகவும், ரொக்கமாகவும், பிரதிவாதியும், எனது தகப்பனாரும் சீர்வரிசைகள் கொடுத்தார்கள் என்றும், அதை பெற்றுக்கொண்டுதான் பாகப்பாத்திய விடுதலை பத்திரம் பிரதிவாதிக்கு ஆதரவாக எழுதிக்கொடுத்தோம் என்றால் சரியல்ல. தற்போது சொத்தின் மதிப்பு பன்மடங்கு உயர்ந்துவிட்டதால் பிரதிவாதியிடமிருந்து சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனவே நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல, தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.